மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.எம்.சுனில்ராஜா, பி.ஏ.எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05 ம் நாள் வியாழக் கிழமை
சி.என்.ஆர்.எண். TNTS0E-002452-2024
M.P.No.06 of 2024 in Cr.M.P.No.**1326/2024**
----

தர்மர் வயது 30/24
த/பெ.முருகையா
கதவு எண்.1–11, பன்னையத்தெரு,
ஆயிரப்பேரி, தென்காசி தாலுகா,
தென்காசி மாவட்டம் .... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர்,
குற்றாலம் காவல்நிலையம்
கா.நி.குற்ற எண்.310/2024
பிரிவு 191(2), 191(3), 126(2),
131, 296(b), 351(3) BNS .....வாதி/எதிர்மனுதாரர்

இம்மனுவானது என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.நல்லையா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் திரு.ஆர்.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இந்த மனுவானது பிரிவு 497 மற்றும் 503 BNS ன் கீழ் வழக்குச் சொத்தான TN 76 AM 0084 என்ற எண் கொண்ட Hero Splender Plus வாகனத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கக் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

2.1. மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் புகார்தாரர் ஆவார். மேற்படி வழக்கில் வாதி காவல் நிலையத்தாரால் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி இருசக்கர வாகனம் மேற்படி காவல்நிலையத்தாரால் கைப்பற்றப்பட்டு பாதுகாப்பு இல்லாமல் திறந்த வெளியில் பராமரிப்பின்றி இருந்து வருவதால், அது இயங்காமல் துருபிடித்து செயலற்றதாக போகவும் மற்றும் வாகனம் உடைந்து வீணாகிவிட வாய்ப்பு உள்ளது.

மேலும் மேற்படி இரண்டு சக்கர வாகனத்தின் பதிவு புத்தகம் அவரது பெயரில் உள்ளதாகவும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி வாகனத்தை அவரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்ற உத்தரவு படி நடக்க தயாராக உள்ளார். எனவே மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி வாகனத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பு பதிலுரையின் சுருக்கம்**

3.1. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 76 AM 0084 என்ற எண் கொண்ட பைக் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து காவல்நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதாகவும். மேற்படி பைக்கை மனுதாரரிடம் ஒப்படைத்தால், மேலும் எதிரி குற்ற செயல்களில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. எனவே வாகனத்தை விற்கவோ, உடைத்து உறுமாற்றவோ வாய்ப்புள்ளது. எனவே மனுதாரிடம் திரும்ப கொடுக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. மனுதாரர் கூறியபடி இம்மனு அனுமதிக்கத்தக்கதா?**

4.1. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வழக்கு சொத்தான TN 76 AM 0084 என்ற எண் கொண்ட Hero Splender Plus ஐ மேற்படி குற்ற வழக்கில் இந்நீதிமன்ற பி.ஆர்.எண்.354/2024 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும். மனுதாரர் மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் தாக்கல் செய்துள்ளார்.

5. மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Sundarbai Ambalal Vs State of Gujarat, reported in 2002 (10) SCC Page 283** என்னும் வழக்கில் நீதித்துறை நடுவர்கள் வழக்குச் சொத்துக்களை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும். வழக்கு சொத்துக்களின் புகைப்படங்கள் மற்றும் பஞ்சநாமா தயார் செய்து அவற்றை வழக்கு விசாரணைக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது.

5.1.மேற்படி முன்தீர்ப்பின்படி மேற்படி இரு சக்கர வாகனத்தினை மனுதாரர்/வாகன உரிமையாளர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**இறுதியாக,** இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் வழக்கு சொத்தான TN 76 AM 0084 என்ற எண் கொண்ட Hero Splender Plus

இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. மனுதாரர் வழக்குச் சொத்தை வேண்டும்போது தாக்கல் செய்வதற்கு ரூ.25,000/–ற்கு உரிய பிணைமுறி எழுதிக்கொடுக்கவேண்டும் மற்றும் வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழ் **(RC Book)** இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

2. மனுதாரர் மேற்படி TN 76 AM 0084 என்ற எண் கொண்ட Hero Splender Plus இருசக்கர வாகனத்தை நான்கு பக்கமும் புகைப்படம் எடுத்து அதில் மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் கையொப்பமிட்டு குறுந்தகடு மற்றும் சாட்சிய சட்டப்பிரிவு 65(b)–யின் கீழ் சான்றிதழுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

3. மேலும் வழக்குச் சொத்தின் உரிய பஞ்சநாமா தயார் செய்து வழக்குக் கோப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. நிலைய பொறுப்பு அதிகாரி குற்றாலம் அவர்கள் மேற்படி வழக்குச் சொத்தான இருசக்கர வாகனத்தை (TN 76 AM 0084 என்ற எண் கொண்ட Hero Splender Plus) மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைத்து அதற்குரிய பஞ்சநாமா மற்றும் அத்தாட்சி தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.09.05 12:53:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை.